**Tamilnadu Science and Technology Centre**
(Department of Higher Education, Government of Tamilnadu)
Gandhi Mandapam Road, Chennai - 600 025.

Office : 044 - 24410025
Direct : 044 - 24918787
Website : www.tnstc.tn.gov.in
E-mail : tnstc.science@gmail.com

**Prof. Dr. K. Shanmuga Sundaram,** M.E., Ph.D.,
Executive Director, FAC.,

**கடித எண் 4390/P1/2026 நாள்: 05.08.2026**

**மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்**
**மாவட்டம்**

**அன்புடையீர்,**

**பொருள்:** தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், சென்னை – மாவட்ட அளவிலான **கணிதத் திறன் தேர்வு மற்றும் அறிவியல் திறன் தேர்வு – 2026**–தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு( State Board Government Schools only) மற்றும் தனியார் பள்ளிகளில்( Including State Board Government Aided schools, Matric, CBSE, ICSE, KV schools) 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக நடத்துதல் – தொடர்பாக.

......

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழக அரசால் 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தன்னாட்சி நிறுவனமாகும். இம்மையம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பமையத்தின் கீழ் சென்னை – பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம், திருச்சிராப்பள்ளி – அண்ணா அறிவியல் மையம் (கோளரங்கம்), வேலூர் – டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட அறிவியல் மையம் மற்றும் கோயம்புத்தூர் – மண்டல அறிவியல் மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்களின் முக்கிய நோக்கம் பொதுமக்களிடையே, குறிப்பாக மாணவர்களிடையே அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அறிவியல் மனப்பான்மை மற்றும் புதுமைச்சிந்தனையை வளர்ப்பதுமாகும். இதன்ஒருபகுதியாக, மாணவர்களின் அறிவியல் மற்றும் கணிதத்திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் பல்வேறு

CamScanner

**Tamilnadu Science and Technology Centre**
CHENNAI - 600 025

போட்டிகள், திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் திறன்தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஒவ்வொரு ஆண்டும் 5 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மேற்குறிப்பிட்டுள்ள அறிவியல் மையங்கள் அமைந்துள்ள மாவட்டங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் **கணிதத்திறன்தேர்வு மற்றும் அறிவியல்திறன்தேர்வுகளை** நடத்திவருகிறது.

இதனைத் தொடர்ந்து, இந்தாண்டு–2026 மாணவர்களின் கணிதத்திறன் மற்றும் அறிவியல்திறன் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட அளவிலான கணிதத்திறன்தேர்வு 04.10.2026 அன்றும் மற்றும் அறிவியல்திறன்தேர்வு 11.10.2026 அன்றும்நடத்தப்படஉள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு (State Board Government Schools only) மற்றும் தனியார்ப ள்ளிகளில் (Including State Board Government Aided schools, Matric, CBSE, ICSE, KV schools) 6ஆம் வகுப்புமுதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இத்தேர்வுகளில் பங்கேற்கலாம். **கணிதத்திறன் மற்றும் அறிவியல்திறன்தேர்வுகள்** குறித்த விரிவான விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட தேர்வுகளை நடத்திட அனைத்து வகை பள்ளிதலைமை ஆசிரியர்களுக்கும் இத்தகவலை கடிதம் வாயிலாக தெரிவித்து, அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை இத்தேர்வுகளில் பங்கேற்க ஊக்குவிக்குமாறு அன்புடன்கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள்உண்மையுள்ள

(signature)

செயல் இயக்குநர் (முகூபொ)

CamScanner